Reg. No.: ............

Code No.34003 Sub. Code: A1TL11

U.G. (CBCS) DEGREE EXAMINATION, NOVEMBER 2020

FIRST SEMESTER

Part I – தமிழ்

பொதுத் தமிழ் - தாள் I

(For those who joined in July 2020 onwards)

Time: Three hours Maximum: 75 marks

பகுதி – அ (10 X 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. சரியான விடையைத் தேர்ந்தெடுத்தெழுதுக.

1. மோனத்திருக்கும் முழுவெண்மேனியான் யார்?
அ) திருமால் ஆ) சிவபெருமான் இ) இயேசுபெருமான் ஈ)முகம்மது நபி

2. மயிலுக்குப் போர்வை தந்தவன் யார்?
அ) அதியமான் ஆ) பாரி இ) காரி ஈ) பேகன்

3. கடல் என்பதைக் குறிக்கும் சொல் எது?
அ) ஆலி ஆ) ஆழி இ)ஆளி ஈ) ஊழி

4. எழுத்துக்கள் எத்தனை வகைப்படும்?
அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5

5. கலித்தொகை ஓதலிற் சிறந்ததாக எதனைக் கூறுகிறது?
அ) அன்புடைமை ஆ) அறிவுடைமை இ) ஒழுக்கமுடைமை ஈ) ஆள்வினையுடைமை

6. பெண்கல்விக்காக சமூக இயக்கம் எந்த நூற்றாண்டில் எழுந்தது?
அ) 17 ஆ) 18 இ) 19 ஈ) 20

7. பொன்னகரம் என்ற சிறுகதையின் ஆசிரியர் யார்?
அ)புதுமைப்பித்தன் ஆ) கு.அழகிரிசாமி இ) ஜெயகாந்தன் ஈ) பாவண்ணன்

8. ‘ஐஸ் பிரியாணி’ என்ற சிறுகதையில் “எப்படியும் முடிச்சுடலாம், கவலைப்படாதீங்க” என்று குருசாமிக்கு நம்பிக்கையூட்டியவன் யார்?
அ) தனராஜ் ஆ) பால்ராஜ் இ) கனகராஜ் ஈ) செல்வராஜ்

9. தமிழ்ச் சிறுகதையின் தந்தை என்று போற்றப்படுபவர் யார்?
அ) உ.வே.சாமிநாத அய்யர் ஆ)வ.வே.சு.அய்யர் இ)பாரதியார் ஈ) கல்கி

10. சிவகாமியின் சபதம் என்ற வரலாற்றுப் புதினத்தின் ஆசிரியர் யார்?
அ) சாண்டியல்யன் ஆ) பொன்னீலன் இ)கல்கி ஈ) ஜெகசிற்பியன்

பகுதி – ஆ (5 X 5 = 25 மதிப்பெண்கள்)

வினா (அ) அல்லது (ஆ) தேர்வு செய்து எழுதுக.
அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

11. (அ) பாரதியாரின் ஆத்திசூடி உணர்த்தும் கருத்துக்கள் யாவை?

(அல்லது)

(ஆ) கண்ணதாசனின் பாடலில் காணப்படும் சமத்துவம் பற்றி விளக்குக.

12. (அ) சுட்டெழுத்துக்கள் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) குற்றியலுகரம், குற்றியலிகரம் - விளக்குக.

13. (அ) கல்வியின் இன்றியமையாமை குறித்து திருக்குறள் கூறும் கருத்துக்கள் யாவை?

(அல்லது)

(ஆ) இராமாயணத்தில் பரதனின் பாத்திரப்படைப்பு பற்றி விளக்குக.

14. (அ). 'ஒரே நண்பன்' என்ற சிறுகதையில் வரும் சந்திரன், வேணு ஆகியோரது நட்பின் தன்மையைச் சித்திரிக்க.

(அல்லது)

(ஆ) 'வசக்குதல்' என்ற சிறுகதையின் தலைப்புப் பொருத்தத்தினை ஆராய்க.

15. (அ) நாடகத்தின் தோற்றத்தினை விளக்குக.

(அல்லது)

(ஆ) சிறுகதையின் வளர்ச்சியினைப் புலப்படுத்துக.

பகுதி – இ (5 X 8 = 40 மதிப்பெண்கள்)

வினா (அ) அல்லது (ஆ) தேர்வு செய்து எழுதுக.
அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

16. (அ) 'நாட்டியல் நாட்டுவோம்' என்ற தலைப்பில் பாரதிதாசன் கூறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கவிஞர் வைரமுத்துவின், 'ஒரு காலத்தில் ஒரு குளம் இருந்தது' என்னும் கவிதை உணர்த்தும் செய்திகளை ஆராய்க.

.

17. (அ) மொழிமுதல் எழுத்துக்கள் யாவை?

(அல்லது)

(ஆ) அளபெடைகள் பற்றி விவரிக்க.

18. (அ) திருக்குறள் வாழ்விற்கு வழிகாட்டும் விதத்தைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) இலக்குவனிடம் காணப்படும் சகோதர அன்பினை விவரிக்க.

19. (அ) 'சேதாரம்' என்ற சிறுகதையில் வரும் ராமுத்தாயின் பாத்திரப்படைப்பினை ஆராய்க.

(அல்லது)

(ஆ) 'ஆறு' என்ற சிறுகதையினைத் தருக.

20. (அ) புதினத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றி ஆய்க.

(அல்லது)

(ஆ) புதுக்கவிதையின் வளர்ச்சியினை விளக்குக.